உளி- 1 | ஓசை-82 | மார்ச்-2024 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - 4 |
| முகமது பாட்சா | - 5 |
| சங்கரி சிவகணேசன் | - 6 |
| வினோத் பரமானந்தன் | - 7 |
| முனியாண்டி ராஜ் | - 8 |
| ச.ஆனந்தகுமார் | - 8 |
| ரோஷான் ஏ.ஜிப்ரி | - 9 |
| கவி. விஜய் | - 10 |
| தங்கேஸ் | - 11 |
| நித்யா | - 12 |
| ஸ்.டென்னிஸ் | - 13 |
| செ.வீரமணி | - 14 |
| நெல்லை க..சோமசுந்தரி | - 15 |
| புதுகை ஆதீரா | - 16 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | - 17 |
| பூங்கோதை கனகராஜன் | - 18 |
| ஜா.பிராங்க்ளின் குமார் | - 19 |
| ஸ்ரீவி.முத்துவேல் | - 20 |
| ரா.ராஜசேகர் | - 21 |
| நேசன் மகதி | - 22 |
| மா. காளிதாஸ் | - 23 |
| மணி அமரன் | - 24 |
| கா வெங்கடேஸ்வரன் | - 24 |
| ஆனந்த பிரபு | - 25 |
| அ.சீனிவாசன் | - 25 |
| அ.ஈடித் ரேனா | - 25 |
| மகேஷ் சிபி | - 25 |
| தி.கலையரசி | - 26 |
| சூர்யமித்திரன் | - 27 |
| இயலிசம் | - 28 |
| கார்த்திகேயன் | - 29 |
| ஜெயதேவன் | - 30 |
| முஜாமலா | - 31 |
| மூசா | - 32 |
| ராஜாஅபி | - 32 |
| தங்கராஜ் பழநி | - 33 |
| மு.பெ.சத்தியநேசன் | - 34 |
| மகிழினி காயத்ரி | - 34 |
| லாஸ்யா | - 35 |
| சுசித்ரா மாரன் | - 35 |
| நீலாம்பரி | - 36 |
| சௌவி | - 37 |
| இமையி | - 38 |
| நறுமுகை | - 39 |



சொர்க்கத்துக்குப் போக
ஆசைப்படுகிறாயா என்றேன்
அங்கே அப்படியென்ன இருக்கு?
எனக் கேட்டவளிடம்
எல்லாமும் இருக்குமென்றேன்
எல்லாமுமென்றால்?
பணம் குவிந்திருக்கும்
தங்கம் குவிந்திருக்கும்
உணவுகள் நிறைந்திருக்கும்
அனைத்து வசதிகளோடு
ஆட்டம்பாட்டமாயிருக்கும்
இன்னும் இன்னும்
என்னென்னவோ இருக்குமென்றேன்...
எது வேண்டுமானாலும் இருக்கட்டும்
அடுப்படி இருக்காதில்லையா?
எனக் கேட்டாள்
பாத்திரங்களைத் துலக்கியபடி...

**வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**



ஒன்பதாம் நூற்றாண்டின்
அடிமைகளின் கதைகளை அவர்கள்
பேசிக் கொண்டிருந்தார்கள்
அவ்வப்போது
அவர்களின் காலம் கி. மு. க்கும்,
கி. பி. க்கும்மாறி மாறிப்
பயணித்துக் கொண்டேயிருந்தது.
20 ம் நூற்றாண்டின் அறிவியல் புனைவை
ஒருவன்  வாசிக்கத் தொடங்கினான்.
ஒருவன்
22 ஆம் நூற்றாண்டின் அடிமையைப் பற்றிப்
பேசத் தொடங்கினான்..
அவர்களின் கால்களில் பிணைக்கப்பட்டிருந்த
சங்கிலிகளில்
ரத்தமும் சீழும் வழிந்து கொண்டிருந்தது...

➔ முகமது பாட்சா



அன்பு தரும் தலைகோதலை விட
அவஸ்தைகள் தரும்
தலைவலிகளுடன்
வாழ்ந்துவிட நினைப்பதுதான்
ஆச்சரியமாக இருக்கிறது..

நினைவுகளின் நிஜங்கள்
நீரில் மிதக்கும் எண்ணெய் போல
ஒட்டிக்கொள்வதில்லை
உணர்வுகளோடு..

உணர்வுகளோடு அறையப்பட்ட
நினைவெனும் ஆணிகளை
ஒவ்வொன்றாய்
கழற்றி எறிகிறாள்
மலைகளுக்கு அப்பால்..

அந்த வலிகளை
அந்த நிராதரவை
கடக்கத் துணிந்தபின்
மலை கூட கடுகளவுதான் கனக்கிறது..

வனவாசம் முடிந்து
வீடு திரும்பியவளுக்கு
படிப்பினைகள் ஒவ்வொன்றும்
வனமாய் இப்போது
அவளுக்குள் வாழ்கிறது..

பிடிப்பதற்கு காரணம் இருந்தும்
பிடிக்காமல் போகிறது சிலரை,
வெறுப்பதற்கு காரணம்
இருந்தும் வெறுக்க
முடிவதில்லை சிலரை..

➜ சங்கரி சிவகணேசன்



இரவுகளின்
வலியை
எழுதிக் கொண்டிருக்கிறேன்..

இரவுகளில்
என் வலியை
எழுதிக்கொள்கிறேன்..

இரவுகளுக்குத் தான்
எத்தனை பலம்....

நேசிப்பை கடந்தவொரு
நேசிப்பை..
கற்றுத்தருகிறது

இரவுகளுக்குத் தான்
எத்தனை பயம்..

மறப்பதை நினைக்கவும்..
நினைப்பதை மறக்கவும்
செய்கிறது....

இரவுகளுக்குத் தான்
எத்தனை நிறம்...

என் மீதான
புகார்பெட்டியை
திறந்தும்...
அடுத்தவர்களின்
புகார் பெட்டியை
நீட்டியும் போகிறது....

இரவுகள்...
தன்னிரக்கம்
கொள்பவை...

இரவுகள்...

இரக்கமே
இல்லாமல்
கொல்பவை...

கவிஞனாக்கும்
பார்வையையும்..
பிச்சைக்காரனாக்கும்
யாசிப்பையும்
ஒரு சேர தர முடிகிறது
இரவுகளால்.....

இரவுகள்....
கருமை நிற
வெளிச்சங்கள்...

இரவுகள்..
நினைவின்
நிழல்கள்..

மொத்தத்தில்..
இரவென்பது..

சுயம் தொலைக்கும்
சுகம்...

சுகம் தொலைக்காத
சுயம்....

➜ **வினோத் பரமானந்தன்**



மீண்டும் உயிர்க்க
இலையிலிருந்து நழுவியது
கடைசித் துளி

➜ முனியாண்டி ராஜ்

நடுங்கும் கைகளுடன் தான்
இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை
அரசாங்க அலுவலரிடம்
கொடுத்தாள் அம்மா..
எழுத்தாக்கத்தில் ஒரு எழுத்து
இடம் மாறியதற்காக ஒப்புதல் அளிக்க
மறுத்து வேறொரு சான்றிதழை
வாங்கி வரச்சொன்னார் அலுவலர்..
இது இரண்டாவது முறை..
இப்போது அப்பாவுடன் வாழ்ந்த முப்பது வருட
வாழ்க்கையை நிருபிக்கும்
போராட்டத்தில் நடுங்கும் கைகளில் அம்மா
சுருக்குப்பையிலிருந்து கொஞ்சம்
பணத்தைத் துழாவிக்கொண்டிருக்கிறாள்

➜ ச.ஆனந்தகுமார்

# வேடிக்கை பார்ப்பவன்.



அத்தனை எளிதாக உன்னை
அனுமானிக்க முடியவில்லை
வழுக்குமேனி சர்ப்பம்போல்
நீ..எந்தவகை சாதியோ...?
என்றிருந்தாலும்.....,
சந்தர்ப்பங்கள்
உன்னை துலாம் பார்க்கிறது....

கணிப்புகளின்படி
கனதியற்ற இடையுனது
மருந்திற்கும் மனிதமில்லை
அறம் இல்லாத புறம் நீ
உனது அனுதின அலுவல்களில்
புரியும்படி சொல்வதென்றால்
புதினத்திற்கே முதலிடம்
வெளித்தோற்றத்திற்கும்
பதிவேற்றத்திற்கும்தான்
பாடுபடுகிறாய் தவிர
யுக மாற்றத்திற்காக
உன்னிடம் ஒரு மண்ணும் இல்லை

நீ.. மதயானை
நீ.. முள் வனம்
நீ..கற்பாசி
நீ.. கொதி மணல்
இவற்றுள் எப்பெயர்
தகும் உனக்குச் சொல்!

**ரோஷான் ஏ.ஜிப்ரி**

# புத்தர் சிலையில் வெயில்

.



இரவிலும் பகலிலும்
வளர்கிறது; மலர்கிறது,
உதிர்க்கிறது,
காய்க்கிறது மரம்.

சருகாகி நழுவி
விழும் பூக்கள்
நிர்வாணமாய்
புத்தர் சிலை.

சற்றுநேரம் நிலவை
மறைத்துக் கடக்கும் மேகம்
அப்படியே இருக்கும் நிலா.

ஒரே விளக்கின்
ஒளியை சுமந்தபடி உதிரும்
நிறையப் பனித்துளிகள்.

மலர்ந்த நிலையில் பூ
இதழ்களை உதிர்த்து
செடியின் பாதம் சேர்கிறது.

சருகான கொடியின்மேல்
நீண்டு படர்கிறது
புதிய கொடி.

காய்த்து சருகாகிவிட்ட
பீர்க்கன் கொடி
அப்படியே இருக்கிறது
கம்பி வேலி.

போகும் இடமெங்கும்
அதனதன் போக்கில்
இரை தேடிக்கொள்ளும்
பறவைகள்.
.
மறையும் அந்தி வான்நோக்கி
விரையும் ஈசல்களுக்கிடையே
பறவைகள் ஓசை.

இலையுதிர்காலம்
போதிமரத்தடி
புத்தர்சிலையின்மேல்
வெயிலடிக்கிறது.

இலையுதிர் காலம்
பூப்பதைத் தொடர்கிறது
பார்த்தீனியச் செடி.

கவி. விஜய்



பிறை நிலவு நாள் தான்
இதை சொல்வதற்கு உகந்தது
வெளிச்சமும் இருளும் கலந்த கலவை

அன்பின் நிமித்தம்
செய்த தவறுகளெல்லாம்
இன்று மன்னிக்கப்பட்டு விடும்

வெள்ளிக்குடம் போல்
பிறையில் ஒரு தளதளப்பு
உள்ளே தழும்பிக்கொண்டிருக்கிறது
கட்டற்ற மனது

சாத்தானுக்கும் எட்டப்பனுக்கும்
இன்று விமோசன நாள்

நானே என்னை
பாத்திரமாக்கிய
பிச்சாடனன்
நீ உன்னை இட்டு நிரப்பலாம்

கருவறையில் எரியும் தீபத்தில்
தணல் கொழுந்தாக
சுடர்விடும் நம் ஆன்மாக்கள்
இன்று பூரண விழிப்புணர்வு பெற்று விட்டன

இந்த நாளை கொண்டாட
மௌனத்தின் மேல் சுழலும் பேரண்டம்
நேசத்தை கருந்திரவமாக்கி
நம் உடலெங்கும் பீய்ச்சி அடித்து விட்டு
செல்கிறது

→ தங்கேஸ்



நீ எங்கோ வானம்
வரைகிறாய்
நான் இங்கிருந்தே
நட்சத்திரம்
தூவுகிறேன்

நீ எங்கோ முத்தச்சோறு
சமைக்கிறாய்
நான் இங்கிருந்தே
தீ மூட்டுகிறேன்

நீ எங்கிருந்தோ
என் திசை தேடுகிறாய் நான்
இங்கிருந்தே
பறக்கவிடுகிறேன்
பட்டாம்பூச்சியொன்றை

நீ எங்கிருந்தோ நிலவை
ரசிப்பாயென இங்கிருந்தே ஒட்டவைத்துக்
கொண்டிருக்கிறேன்
வானில் என் ஒற்றை
வளையலை....

➜ **நித்யா**



மரநிழலில் உறங்கும் பெண்ணை
களையெடுக்க எழுப்பும்
மதிய வெயில்...

இந்த விலைமாது வீட்டில்
மாதம் மூன்று நாள்
எரியும் மின்விளக்கு...

உறங்கும் குழந்தை
பூவிழுந்ததும் கண் விழிக்கிறாள்
ஆழ்ந்த உறங்கிய தாய்...

யாசகன் ஒலிப்பெருக்கில்
பாடிய பாடல்களில் ஒன்று
நான் ஏன் பிறந்தேன்...

மகள் வரைந்த சக்கரம்
ஒரு வட்டத்துக்குள்
மூன்று சிலுவைகள்...

ஸ்.டென்னிஸ்



கூடை பூக்கள் பூத்தால்
உன் பூசைக்கு
அனுப்பி வைப்பேன்

கொஞ்சம் பூக்கள் பூத்தால்
உன் கூந்தலுக்கு
சரம் தொடுப்பேன்

ஒற்றை பூ பூத்தால்
உன் பெயரெழுதி
பரிசளிப்பேன்

என் பூக்கள்
வந்தடையாத தினத்தில்
உன் தோட்டத்தில்
தேடிப்பார்

நானே ஒரு பூவாக
பூத்திருப்பேன்

➜ **செ.வீரமணி**



பிராத்தனைகளுக்காய்
ஏற்றி வைத்த
துளசி மாடத்தின்
தீபத்தில் ஒளிர்கிறது
உயிர் சுடர்!

இசைக்க தெரிந்த
புல்லாங்குழல்
ஓட்டையின்
மூச்சுக் காற்றில்
கலந்து நிற்கிறது
அரூப மற்ற
இந்த
பிரியங்களின் ஜீவிதம்!

மீராவின்
ஞாபகப் பக்கங்களில்
தனித்து விடப்படுகின்றன
சுருதிச் சேராத
ஆலாபனை ராகங்கள்!

மீட்டும் நரம்புகளின்
அதிர்வுகளில்
வெளிப்படுகிறது.
அதன்
மௌன கீதங்கள்!

பச்சையமாய்
ஒளிரும்
நீல வண்ணத்திற்குத் தெரியும்?!
கடலும் வானும்
சந்திப்பதில்லை...
ஆனாலும்...
நீர்த்துப் போகாத
நேசப் பெருவெளியில்
அவை எப்போதும்
நிறம் மாறுவதில்லை என்று..??

நெல்லை க..சோமசுந்தரி

# காடு



அடர்ந்த இருளில்
நெடிதுயர்ந்த மரங்கள்
கிளைகளில் நிறைந்த
வண்ணவண்ணப் பூக்கள்
காற்றோடு அசைந்து
மிதந்திடும் பூவாசம்
நறுமணத்தில் நடனமிடும்
சருகுகளின் சலசலப்பு
அபிநயத்தின் அசைவிற்கு
இன்னிசைக்கும் குயில்பாட்டு
விலங்குகள் ஒலியெழுப்பி
முகவரியை பறைசாற்ற
இலைகளின் இடுக்கில்
ஊடுருவும் வெளிச்சத்தில்
நிறைந்திருக்கும் நிசப்தம்
ஓடையின் ஓசையில்
தாகந்தணிக்கும் மானும்
பசியாறிய புலியும் எதிரெதிரே
அதனதன் தேவையில்..
உள்ளிருப்பில் காடு
அழகாய் இருக்கிறது

புதுகை ஆதீரா



சருகுகளைக் கூட்டிக் களைத்த மனதிற்கு
பிறந்த மேனி இலைகளும்
வேப்பம்பூ மணமும்
புத்துணர்வை தருகிறது

காதல் நோயில்
இளைத்திருந்த மரம்
வசந்தக்கால காதலன் வந்துவிட்ட மகிழ்ச்சியில்
செழித்தது

இனிப்பைத் தேடி வந்த தேனீக்களை
ஏமாற்றவில்லை
வேப்பம்பூக்கள்

பறவைகளின் வரத்து அதிகமானதை
இசைத்துக் கொண்டிருந்தது
காற்று

கசப்பு மரத்தில்
எத்தனை இனிமை
உரக்கச் சொல்கிறது
வாழ்வின் உண்மை.

செ.ரா.கிருஷ்ணகுமாரி



அடர்ந்த தனிமை
ஒரு பாயாக காலடியில்
நிழலாக இருளப் படர்கிறது
எரிந்து அணைந்த
விளக்கின் திரியாக
நுகரப் பிடிக்காத மணமாகக் கரிகிறது
கிளையொடிந்த மரமாக
வெயில் உரைக்கிறது
துணைக்கு யாருமில்லாத இரவில்
யாரோ தாழ்ப்பாளை ஆட்டுவது போல
நெஞ்சை நடுக்குகிறது
மேலிருந்து நீரள்ளும் உங்களுக்கு
புரிவதேயில்லை
சோகம் மறைத்து சிரிக்கும் புன்னகையாக
இருகரையிலுமிருக்கும் புதர்களோடு
அடியிலிருக்கும் பள்ளங்களை மறைத்தபடி
ஓடும்
தனிமை நதி

➜ **பூங்கோதை கனகராஜன்**



ஒரு குரலுக்காகவும், பார்வைக்காகவும்,
வெயிலேறிக்கிடக்கிறது
நீளும் தண்டவாள
ஜல்லி கற்களாய்..
ஒரு காத்திருப்பு!

தூர கையசைப்புகள்
தெளியுமிடம் ‘வெம்பும்,
உன் மாய நகல்கள்
உலவும் வழித்தடமெங்கும்!

மலர்கள் தளரும்!
சாக்லேட்டுகள் உருகும்!
பரிசுகளில் படியும் விரல்
பதிந்த வியர்வை!
கடிகார நொடிமுள்,
காதில் இடிக்கும்!

சுவை நீங்கிய பின்னும் சுவிங்கத்தை,
மென்று கொண்டேயிருப்பது
ஒரு தியான நிலை!

➜ **ஜா.பிராங்க்ளின் குமார்**

# மனஉண்டியலில் கூடும் நினைவுக்காசுகள்



முடி உதிர்ந்த தலைக்குன்றில்
துளிர்விடும் கோரை முடிகள்
வில்மீசையும் பிரெஞ்சு தாடியும்
அழிய அழிய
அந்தி பூசிய வானமாய் மாறும்
பிஞ்சு சூரியன் முகம்

காலத்தோடு வற்றும்
கொசுவச் சட்டை வன்துணியாடை
ஆடிக்காற்றை முந்திச்செல்லும்
கால்சட்டை மூங்கிலுடம்பாய்
உருவெடுக்கும் பொழில்தோற்றம்

சோகமதிப்புகள் சரிந்து
ஏற்றம் காணும்
இன்பப்பங்குச்சந்தை
மிதிவண்டியோடு உறவாடும் நொடியில்

**ஸ்ரீவி.முத்துவேல்**



உடைந்த மணற்துகளின்
ஒரு துண்டு

உடைந்த மழைத்துளியின்
ஒரு துளி

உடைந்த காற்றின்
ஒரு திசு

உடைந்த மேகத்தின்
ஒரு சில்

உடைந்த அலையின்
ஒரு சிற்றலை

உடைந்த மனதின்
ஒரு பகுதி

யாவற்றையும்
கலைடாஸ்கோப்பில் இட்டுக்
குலுக்கிப் பார்த்தபோது

உருண்டோடின அனைத்தும் வண்ணங்களில்

உடைந்த கண்ணீர்த்துளி
ஒன்று மட்டும்
கறுப்பு வெள்ளையாக
ஒளிந்து மறைந்துகொண்டு
சிரிப்புச் சத்தத்துகளுடன்

ரா.ராஜசேகர்

# பேரன்பு கொண்ட பெரியோர்களே!



கவனமாக இருங்கள்
இவர்கள் உங்கள் ஊருக்கும் வரக்கூடும்

பெரிய பெரிய கார்களில் வந்திறங்கி
நம்ம ஊரில் நாமே டீக்குடிக்காத கடையில்
டீக்குடிப்பார்கள்!

உங்கள் வீட்டு குழந்தைகளைத் தொட்டுத் தூக்கி
கொஞ்சுவார்கள்.

வீட்டுக்கு வெளியே கட்டில்களை போடாதீர்கள்
அதில்தான் படுப்பேன் என்று அடம்பிடிப்பார்கள்!

கூழ் குடிப்பதாக இருந்தால்
மறைத்துக்குடியுங்கள் அதையும்
பறித்துக்குடிப்பார்கள்.!

நடுரோட்டில் நின்று
பிரச்சாரம் செய்துகொண்டே
ஆம்புலன்சிற்கு
வழிவிடுவார்கள்!

திண்ணைக்
கிழவிகளிடம் ஆசிர்வாதம்
கேட்பார்கள்...!

முக்கத்துச்சிறுவர்களிடம் பேட்டைப்
பறித்துக்கொண்டு கிரிக்கெட் ஆடுவார்கள்!

சாலையோர உணவகத்தில்
வாக்குறுதிகளைப்போலவே
புரோட்டக்களையும்
அடித்துவீசுவார்கள்!

தெருக்குழாயில் தண்ணீர் தராதவர்கள்
கங்கையையும் காவிரியையும் இணைப்போம்
என்பார்கள்

சாலை விபத்தில்
காயமடைந்தவனை அவர்களின் வாகனத்தில்
ஏற்றிக்கொண்டு ஓடுவார்கள்.!

கவனமாக இருங்கள் இவர்கள் உங்கள்
ஊருக்கும் வரக்கூடும்

→ நேசன் மகதி



என்னிடம் குளுமையான
அன்பு இருக்கிறது.

நீரென்று கருதினால்
எடுத்து முகம் கழுவு
ஒரு மடக்கு அருந்து.

காற்றென்று கருதினால்
வெக்கையை ஒளித்து வை
இழுத்து உள்வாங்கு.

வெளியென்று கருதினால்
துகளாகு
கூக்குரலிடு.

உணவென்று கருதினால்
எடுத்து உண்
தானம் செய்.

பொருளென்று கருதினால்
பரிசளி
அலங்கரி.

வெறுமனே
வேடிக்கை மட்டும் பார்க்கும் போது
பாசி படர்கிறது என் மேல்.

மா. காளிதாஸ்



காலையிலிருந்து திருவிழாகோலம்தான்
மகளிர் தினமல்லவா

சிலம்பம் நடனம்
சமையல் சங்கீதம்
கதை கவிதை கட்டுரை
கோலப்போட்டியென்று
அத்தனையும் வென்றாயிற்று

இதோ இருட்டிவிட்டது
வீடு செல்ல வேண்டும் இனி
அத்தனை பயமாக இருக்கிறது
எந்த புதரில் ஒளிந்திருக்குமோ
இரண்டு கால் மிருகம்

ஆமாம் என்ன செய்வது
எங்கள் யோனிக்கு பற்கள் இல்லையே

➜ மணி அமரன்

அவள் ஊதி ஊதி
காற்றை நிரப்பிய
பலூன்களில்..............
சில விற்றுப்போனது
சில வெடித்துப்போனது
அவளுக்கென்று
பெயரெழுதிடாத
அரிசியை போலவே
சிந்திக்கிடந்தன
அந்த..........
வெடித்த பலூன்கள்.

இறுதியாக கையிலிருந்த
ஒரு பலூனை மட்டும்
அவள் விற்கவில்லை
இரவு பசியின்போது
அவளது கவனத்தை
திசை திருப்ப
அது ஏதுவாக இருக்கலாம்.

➜ கா வெங்கடேஸ்வரன்



கருப்பு வெள்ளையிலும்
வண்ணம்
இழப்பதில்லை
பட்டாம்பூச்சி!!

→ **அ.சீனிவாசன்**

முதல்வரி விழுகிறபோதே
இறுதியில் முற்றுப்புள்ளி வருமெனத்தெரியும்.
ஆனால்
கடைசிவரி இதுதானென
ஒருமுறைக்கூட கணிக்க
முடிந்ததேயில்லை.
கவிதைப்போலொரு வாழ்வு.
அல்லது
வாழ்வைப்போலொரு கவிதை.

→ **ஆனந்த பிரபு**

விடுமுறை நாளொன்றில்
வேலைக்குச் செல்ல
வேண்டிய கட்டாயம்
நம்ப மறுத்த ராமர்களிடம்
வீடியோ காலில்
தீக்குளிக்கிறார்கள்
சீதைகள்

→ **அ.ஈடித் ரேனா**

அவசரத்திற்காய்
மகன் சேகரித்த
உண்டியல் நாணயங்களை பெறும்போது
கைகள் நடுங்குகின்றன

→ **மகேஷ் சிபி**



ஒவ்வொரு மாதவிடாயும்
ஸ்கேன் பரிசோதனைகளும்
ஹார்மோன் ஊசிகளும்
இறைவழிபாடு போல் பயபக்தியுடன்
நடந்தேறுகின்றன.

பத்தாவது நாள் முதல்
சினைமுட்டை
கடவுளின் பிம்பமாக மாறுகிறது
ஸ்கேன் அறிக்கையில்
மெல்ல வளரும் கருமுட்டையின் ஆரம்
நம்பிக்கைகளைத் தீர்மானிக்கிறது

கருப்பெற
தகுந்த நாளில் இணையரோடு
ஒன்றிணையச் சொல்லும் வாக்கு
தேவ வாக்கு

எத்தனை இன்னல்கள் இருந்தாலும்
வாக்கினை நிறைவேற்றிக் காத்திருப்பவளுக்கு
ஒவ்வொரு நாளும்
யுகம்.
மாதவிடாயின் நினைவுகள்
சாத்தானாக அச்சுறுத்துகிறது

நாட்கள் தள்ளிப் போகும்போது
பரிசோதனை ஸ்டிரிப்பை
ஒரே மருந்துக்கடையில்
ஒவ்வொரு முறையும் வாங்கத் தயங்கும்
மனதில்
கடவுளும் சாத்தானும்
செயலற்று நிற்கிறார்கள்.

**தி.கலையரசி**



முதுமை
ஊன்றுகோலில் மறைத்து
வைக்கப்பட்டிருக்கிறது

மருத்துவ அறிவுரை
அந்த கோலின்
பித்தளைக் கைப்பிடியில்
இளிக்கிறது

வாழ்ந்துமுடித்த
வசந்த நாட்களை
முதுகில்
இறைவன் எழுதி
படி என்கிறான்

வேறுயாரும்
எதுவும் வாசிக்க
உதவவும் கூடாது
என்பது அவன்சித்தம்

நானும் முயற்ச்சிக்கிறேன்
வாழ்நாளின்
தேவ நாட்களை 'சிப்'
கைக்குக் கிடைத்தால்
போட்டுப்பார்க்கலாம்

எனது அவள்
மட்டும்
இருந்திருந்தால்
பளிங்கு முகத்தில்
கண்ணாடியாக
எப்போதோ
வாசித்து
முடித்திருப்பேன்.

→ சூர்யமித்திரன்



இரு மருங்கிலும் சூழ்ந்திருக்கும்
மரங்கள்
சிதறிய மணிகளை
துளைத்தெடுத்து கொண்டு போகும் எறும்புகள்
தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்
குருவிகள்
ஆங்காங்கே வழி சொல்லும்
சிதறிய சூரியத்துண்டுகள்
பசியோடு காத்திருக்கும்
முற்களின் பற்கள்
பிறகு பார்த்துப்போவென
பயமுறுத்தி
சொல்லி விட்டுப் போன
ஒரு நாகத்தின் முறைப்பு
தலையில் குட்டு வைத்து
சிரித்த சில இலைகளின்
இறுதி நிமிடங்கள்
வரவேற்று பேசிக்கொண்டு
உடன் வந்த காலடிச்சுவடுகள்
எளிதாக கடந்து
வந்து விட்டேன்
என்னைப் பிரிந்த பின்
என்ன செய்யும்
அந்த ஒத்தையடிப்பாதை.
தனியாக விட்டு விட்டேனோ..!!???.

➜ இயலிசம்

# கவிதைகள் பலவிதம்



சிந்தையில் தோன்றும்
சந்தங்கள் மிக்க
வார்த்தைகள்
மட்டுமா.....கவிதை....

அன்றாடம் சந்திக்கும்
வியர்வை மனிதர்களும்.....
சந்தர்ப்ப நிகழ்வுகளும் கூட
கவிதை தான்........

பட்டுக்கோட்டைக்கு
தெரிந்த பாதை ......
பாவம், இப்போது இங்கு
எவருக்குத்தான் புரிகிறது.......

எனக்கென்னவோ
பாதி நசுங்கிய
பவுடர் டப்பாவும்.......
மூடி கழண்ட
சோடா புட்டியுமே.....

ஒரு கவிதை எழுத
போதுமானதாக உள்ளது.

➜ கார்த்திகேயன்



இன்றோடு முடிவது இல்லை இன்று.
நாளையோடு முடிவது இல்லை நாளை.

மரணமற்ற பெருவாழ்வுக்கு விதிக்கப் பட்டது
இவ்வையம்

கிடக்கும் போது கிட கல்லென
எழும்போது எழு வில்லென

வாழ்க்கை ஒரு பூமராங்.
நீ விட்ட இடத்தில அதைப் பற்றிக் கொள்வான்
உன் மகன் அன்றி மகள்.

இறந்தவன் கூட இன்னும் அகல விரித்துப்
பார்த்துக் கொண்டிருக்கிறான் வானத்தை.
அங்கேதான் நேற்று இறந்தவன் இருக்கிறான்
நாளை பெய்யும் மழை ஒருவேளை
அவனாகவும் இருக்கலாம்.

கடைசி மனிதன்
கடைசி தாவரம்
கடைசி மழை
கடைசி விதை
கடைசி புள்ளினம்
கடைசியாய் ஒரு மிருகம் என ஏதும் உண்டா
நீர்சூழ் உலகின் கடைசிச் சூரியனுக்குள்ளும்
ஒரு குட்டிச் சூரியன்
இருக்கும்.

➜ ஜெயதேவன்



மரணத்தை
சுவைத்துக் கொண்டிருக்கும்
எளிய ரூபம்  அது

அதன் வடிந்த பக்கங்களில்
கிடைக்கப் பெற்ற
மனச் சடைவுகள்
இப்போதும் நிலையற்ற
இருத்தலின் பிடிப்புக்களாக

எப்போதும் போல
ஆன்மா  இழந்த நினைவுகளின்
அருகிருப்பாய்
அடுத்த நொடிகளில்
மிகைத்திடும் தனிமை கவ்விக்கொள்கிறது

இருங்கள்
இன்னுமின்னும் உலுக்கி விடாதீர்கள்
அதிகபட்சம்
ஒரு மாறுதலுக்காய்,

வெகுதூரம் பறந்து சென்று
வானத்துக்கு அப்பால்
தான் யாரென்ற சித்திரங்களை
வரைந்து வைக்கிறது

ஒரு பட்டாம்பூச்சியின்
படபடக்கும்  சிறகிற்கு நிகராக
இல்லை
இரங்கல் வரிகளில்
ஒழிந்து கொள்ள மறுத்த
பூவொன்றின் உதிரலாக

விதி செய்த சதிகளை
திறந்து வைக்கும்
அவ் ஆயுளின்  படிமம்
இனித் தோதான மட்டும் நீளும்
விவாதிக்க மறந்த உங்களில்
ஒருத்தராய்

➜ முஜாமலா



வற்றிய குளத்தில் ஒற்றைக்கால் தவம்
நாரைக்கு வரம் தரும் மீன்கள்

ஈரமில்லா வேர்களுக்கு பாத பூஜை உதிர்ந்து
விழும் காகிதப்பூ

முழு இருளையும் தின்று தீர்த்த மெழுகுவர்த்தி
விலாசம் தேடும் விட்டில்பூச்சி

தலை துவட்டாத தென்னை மரம் அழுது
புலம்பும் அடை மழை

மழை நின்ற பிறகும் நனைகிறேன் நலன்
விசாரிக்கும் மண் வாசனை

இப்படித்தான்

அவள் இதழ் தொட்டே இசை கற்றது
புல்லாங்குழல் சூடாகிய மூங்கில்

ராஜாஅபி

உன் அழுத்த நினைவுகளை
மீளப்பெற
என் மின்சாரக்கனவுகள்
சூழல் தடைகளொடுப்
பொருதிக்
கொண்டேயிருக்கின்றன..
ஓம்..ஓம்..ஓம்

மூசா

# நான் ஏன் இண்ட்ரோவெர்ட்டாக இருக்கிறேன்



நான் பேசுவதற்குத்
தயங்குகிறவனில்லை
அதிகம் பேசுவதற்கு விரும்பாதவன்
நான் மௌனங்களின் ஆழத்தை நன்கறிந்தவன்
தனிமையிலிருக்கும் இனிமையை
உணர்ந்தவன்
கனவுலகில் வாழப்
பழகிக்கொண்டவன்
நான் நெருப்பு
நிலவு மற்றும் நதியின்
மொழிகளை கற்றவன்
என் மேஜை மீதிருக்கும் புத்தர்
என்னிடம் கடிஜோக் அடிப்பார்
குடுவையிலுள்ள மீன்
எனக்காகப்
பாடல் பாடும்
நான் கோபத்தையும்
ஆத்திரத்தையும் அழுகையையும்
வெளிப்படுத்துவதில்லை
மாறாக
ஒரு பிளேட்
மட்டன் பிரியாணி சாப்பிடுவேன்...!

➜ தங்கராஜ் பழநி



சிறகுகள்
தேடித்தேடி அலைந்து
களைத்துப்போன வேளையில்
சிலுவையில் அறையப்பட்டேன்!
இப்போது
சிலுவையே
சிறகாகிப் போனது!

➜ **மு.பெ.சத்தியநேசன்**

அவ்வளவு
தீர்க்கமாக எதையும்
கணிக்கத் தெரிவதில்லைதான்
ஆனால்
கொஞ்சமே
கொஞ்சம்
கருணை
ஒட்டிக்கொண்டிருக்கிறது

காக்கைக்கென
வைத்த
அடிசிலின்
கடைசிப்பருக்கை
குருவிக்கென
மீதம் இருப்பது போல்

சருகுகளின்
வசந்தம்
மண்புழுவின்
விடியலில்
தொடங்குகிறது

➜ **மகிழினி காயத்ரி**



ஆழ்ந்த கருமை பூசிக்கிடக்கும்
இரவின் இருண்மை ஒளியில்
சலனமற்றுக்கிடக்கும்
தனிமையின் நிசப்தத்தில்
நினைவுகளில் சிரிப்புள்ள மிருகத்தின்
கண்களில்
அடிக்கடி நிழலாடும்
வாய்விட்டுச் சிரித்த காலத்தின்
ஞாபகங்களை எப்பொழுதேனும்
அசைபோட மட்டுமே
அனுமதிக்கிறது காலம் !!

➜ லாஸ்யா

பேருரு தரிசிக்கும்
முயங்கல் பொழுதில்
அன்பின் அடியைக்
கடித்துத் தேடுகின்றன
பற்கள்

ஒளிரும் உச்சிக்குச்
சாட்சியாகும்
உதிர்ந்த ரோமத்தின்
தாழைக்குரல்
ஒதுக்குகிறேன்

செல்லச் சினத்தின்
முடி பார்க்க
நகக்குறிப் படிக்கட்டுகள்
மீதேறுகிறேன்

சட்டென
மீச்சிறு
உருக்கொள்கிறாய்..

அச்சமூட்டுகிறது
உன் முன்
விஸ்வரூபமாய் இருக்கும்
நான்

➜ சுசித்ரா மாரன்



என் வீட்டில் எப்போதும் ஒரே ஒரு தேநீர் கோப்பை தான்...
எனக்கென்றே வாக்க பட்டு வந்திருக்குமோ என்னவோ...
என் இதழின் உரையாடல் எல்லாம் அதனோடு மட்டுமே...
நெடு நேரம் பேசிக்கோண்டிருப்போம், பெரும் பொழுதுகள் இப்படியே கழியும்...
தனிமை மிகும் போதெல்லாம் தேநீரை காய்ச்சி ஊற்றி...
சிறிது ஆறவிட்டு ஆறுதலாய் பேசிக் கொள்வோம்...
எப்போதும் என் பெரிய மேசையில் அதற்கு நிரந்தரமாய் இடம் உண்டு...
அன்றும் அப்படித் தான் இரவு நெடு நேரம் பேசிகொண்டிருந்தோம்...
திடீரென கோப்பை தேநீரை கீழே கொட்டி விட்டு, அழைத்தது...
நீ வந்து நிரம்பிக்கொள் என்று...

➜ நீலாம்பரி



முன்பு
கணிப்பொறியைத் திறக்க
ஒரே ஒரு பாஸ்வேர்டு மட்டுமிருந்தது
ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும்
சுலபமாயிருந்தது
பின்பு மெயிலைத் திறக்க
ஒரு பாஸ்வேர்டு தேவைப்பட்டது

பின்பு
மெல்ல மெல்லப் பெருக ஆரம்பித்தன
பாஸ்வேர்டுகளின் எண்ணிக்கை
அலைபேசியைத் திறக்க ஒன்று
வாட்ஸ்அப்பைத் திறக்க ஒன்று
இன்ஸ்டாகிராமைத் திறக்க ஒன்று
சாட் ரூமைத் திறக்க ஒன்று
வங்கிக்கணக்கைத் திறக்க ஒன்று
பணப்பரிவர்த்தனைக்கு ஒன்று என்று
இப்போது வாழ்வென்பது
பாஸ்வேர்டுகளால் நிறைந்து கிடக்கிறது
அதிகப்படியான பாஸ்வேர்டுகள்
ஞாபகத்துக்குள் அடங்க மறுத்து
ஓடிவிடுகின்றன
ஓடிப்போன பாஸ்வேர்டுகளைப் பிடித்துவந்து
ரகசியப் புத்தகத்தில்
பாதுகாக்க வேண்டியிருக்கிறது
பாஸ்வேர்டுகளற்றிருந்த நாட்கள்
வெகு சுலபமாயிருந்தன
பாஸ்வேர்டுகளால் சூழப்பட்ட பிறகு
எல்லோரும் குழப்பமாகவேயிருக்கிறார்கள்
அவர்களைத் திறக்கும் பாஸ்வேர்டையும்
அடுத்தவர்களைத் திறக்கும் பாஸ்வேர்டையும்
கண்டுபிடிக்க முடியாமல்

→ சௌவி



எதிர்பார்ப்பில்லா அன்புதான் நிஜம்
என்கிறார்கள் அன்பை தெரியாதவர்கள்

எதிர்பார்க்கவேண்டும்
அன்பினை
எதிர்பார்க்க வேண்டும்

அப்போதுதான் நாம் கொடுக்கும் அன்பில்
தூய்மை இருக்கும்.

எனக்கும் இதுபோல வேண்டும் எனும்
போதுதான் அந்த அன்பில் உயிர்ப்பிருக்கும்

தானமாய் கொடுக்க வேண்டாமே திருப்பிக்
கேளுங்கள் அப்போதுதான் அதன் பொறுமதி
இருக்கும்

அன்பை அன்புக்காக கொடுங்கள் அன்பை
கொஞ்சம், அன்பாகவும் கொடுத்துவிடுங்கள்

கேட்கிறார்கள் என்பதற்காக கொடுக்க
வேண்டாம்
கொடுக்கவேண்டும் என்பதற்காக கொடுங்கள்

→ **இமையி**



அடிமையாகி விடாதீர்கள்
யாருடைய அன்பிற்கும்..

வார்த்தைகளுக்கு அங்கு
அர்த்தமில்லாது போய்விடும்..

மௌனத்தின் மொழிகள்
உரைக்கப்படாமல்
போய்விடும்..

காதலின் புனிதம்
மெருகேறாமல்
போய்விடும்..

காத்திருப்பின் சுகம்
கானலாய் மாறிவிடும்..

கண்ணீரின் வலிகள்
துச்சமாய் தெரிந்துவிடும்..

ஏக்கங்கள் யாவும்
ஏமாற்றம் தந்துவிடும்..

அன்பிற்கும் ஆறுதலுக்கும்
அரவணைப்பிற்கும்
**அன்பு** அடிமையைத்
தேடுவதில்லை..

அன்பு அது உண்மையாய்
இருந்தால் போதும்..

➜ நறுமுகை

படைப்பு

சென்னையின் மைய பகுதியில்

# படைப்பு அரங்கம்

## Facilities

- Capacity 90 to 100 (Members)
- AC Hall
- POP with Profile Lights
- Tea/Coffee snacks place
- Projector

இலக்கிய நிகழ்வுகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்




முகவரி

படைப்பு குழுமம்
#3, Ground Floor,
Ajantha Tower,
Corporation Colony Street,
Kodambakkam, Chennai
Opp: R2 Police Station

**+91 73388 97788 / 73388 47788**

padaippu | admin@padaippu.com | www.padaippu.com